www.padippakam.com



# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

## ஈழத்தவர் வரலாறு

-செங்கை ஆழியான்-

### ஈழநாடும் ஈழத்தவர்களும்

### இலங்காபுரி/ ஈழம்

இலங்கைத் தீவு முழுமைக்குரிய பெயராக இலங்காபுரி, ஈழம் என்றும் பெயர்கள் பண்டை தொட்டு விளிக்கப்பட்டு வருகின்றபோதிலும் இவ்விரு பெயர்களும் இன்று வரை நிலைத்து நிற்கும் சிறப்பினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்காபுரி பற்றிய ஆரம்பக் குறிப்பு ,இராமாயணத்தின் உத்தரகாண்டத்தில் வருகின்றது.

குபேரனுக்காக விசுவர்மன் என்ற தேவதச்சனால் அமைக்கப் பெற்ற இலங்காபுரி, பின்னர் குபேரனால் இராவணனுக்கு கையளிக் கப்படுவதாகக் குறிப்பிட ப்படுகிறது.

'இலங்கை என்ற பெயரால் இந்நாடு முழுவதும் இன்று வரை அழைக்கப்படுவதே இலங்கா புரியின் மங்காத புகழை இன்றும் நிலை நிறுத்துகிறது. மேலை த்தேய நாட்டினர் இந்நாட்டிற் காலெடுத்து வைத்தது முதலாகவே இலங்கை என்ற பெயர் சைலன் (ZEILAN) என்றும் சையிலன் (SAILAN) என்றும் சிலோன் (CEYLON) என்றும் திரிவு பெற்று உச்சரிக்க ப்படலாயிற்று'

ஈழம் என்ற பெயரால் இலங்கை அழைக்கப்பட்டமையை பண் டைய தமிழ் இலக்கியங்கள், பழைய கல்வெட்டுக்கள், புராதன காசுகள் என்பன உறுதிப்ப டுத்தப்படுகின்றன. பட்டின ப்பாலை எனும் சங்கநூலில், 'ஈழத்துணவும் காழகத்து ஆக்கமும்' என வருகின்ற வரி குறிப்பிடத்தக்கது.

திருப்பரங்குன்றப் பிராமிக் கல்வெட்டில் ஈழக்குடும்பிகன் என்பவனது பணிபற்றிக் குறிப்பி ட ப்பட்டுள்ளது.

பிற்காலத்தில் பாண்டிய கல்வெட்டொன்றில் ஈழம் பற்றிய தகவலுள்ளது.

இலங்கையில் அனுராதபுரத்தில் கிடைத்த கல்வெட்டொன்றில் ஈழக்காசுகள் பற்றிக் குறிப்பிட ப்பட்டள்ளது. இந்த ஈழக்காசுகளே சிங்கள மன்னர் பயன்படுத்திய சுகவனுக் காசுகன் எனக் கருதுவர்.

எவ்வாறாயினும் இலங்கையின் பிரதான வரலாற்று மூலகங்கள் எதிலும் இதுவரை இலங்கை, ஈழம் என்று அழைக்கப் பட்டதற்கான சான் றுகள் கண்டு பிடிக்கப்ப டவில்லை. ஆனால் முதன் முதலாக ப. புஸ்பரட்ணம் என்பவரால் பூநகரியில் கண்டு பிடிக்கப்பட்ட இரண்டு மட்பாண்டப் பிராமிச் சாசனங்கள் இவ்வகையில் குறிப்பிட த்தக்கவை.

இவற்றுள் மூன்று எழுத்து க்களைக் கொண்ட முதலாவது சாசனம் பெருமளவு உடைந்து இருப்ப தனால் அதனை ஒரு முழுச் சாசனமாகக் கொள்ள முடியா திருக்கின்றது. ஆயினும் இதன் முதலிரண்டு எழுத்துக் களிற்கும் 'ஈழ' என்ற ஒலிப்பெறு மானத்தைக் கொடுத்து 'ஈழ' என்று வாசிப்பது பொருத்த மானதாக தெரிகின்றது எனப் புஸ்பரட்ணம் குறிப்பிடுகிறார்.

இரண்டாவது சாசனம் 'ஈலா' என்ற வாசகத்தைக் கொண்டது. இவை இரண்டும் ஈழத்தையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

ஈழம் என்றால் உலோகக் கட்டிகள், பொன் எனப் பலவாறாக அர்த்த ப்படும். ஈழம் என்ற பெயர் வந்தமைக்கான காரணத்தை வரலாற்று ஆசிரியர் முதலியார் செ. இராசநாயகம் . விளக்கியுள்ளார். இலங்கையில் வசித்த நாகரும் இயக்கரும் 'எலு' வென்று இக்காலத்தில் பிழைபட வழங்கப்படும் 'ஈழு' வென்னும் நிறைவற்ற பாஷையையே பேசி வந்தார்கள். அதனால் இலங்கை க்கு 'ஈழம்' என்றும் 'ஈழமண் டலம்' என்றும் பெயர் உண்டாயிற்று. ஈழம், சீழம் என மருவிச் 'சிஹழம்' , சிங்களம் என மாறியது. சீழம் என்ற பெயரிலிருந்தே சீழம்தீப் சேரண்டிப் எனும் அராபிய நாமங்களும் 'சிலோங்', 'சிலோன்' என்னும் மேலைத்தேயவரிட்ட பெயர்களும் வந்தன என அவர் குறிப்பிட்டுள்ளார். ஈழம் என்ற பெயர் திரிபடைந்து 'சிறீ' என்ற அடைமொழியுடன் சேர்ந்து சீகள என்ற பாளி வடிவமாகவும் சீம்பன என்ற வடமொழி வடிவாகவும் வளர்ச்சியடைந்தது என்பது ஏற்புடைய கருத்தாகுமெனச் சிற்றம்பலம் கருதுகிறார்.

பண்டைய இலங்கையின் வட பெரும்பகுதி நாகதீபம் எனவும் தென் பெரும்பகுதி தம்பபண்ணை அல்லது தாமிபரணி எனவும் இரு தெளிவான புவியியல் அலகுகளாக விளங்கின. கதம்பநதி எனப்படும் அருவி ஆற்றுக்கும் நாகபொக் கணை, திரிகூடம் என்னும் பகுதிகளுக்கும் வடக்கேயுள்ள பிரதேசம் நாகதீபம் எனப்பட்டது. நாகதீபத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு,அதன் அயற்றீவுகள், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு முதலான பிரதே சங்கள் அடங்கி யிருந்தன. கதம்ப நதியையும் மகாவலி கங்கையின் சுழிமுக க்கிளையையும் இணைக்கும் தென்புற வளைகோட்டிற்குத் தெற்கே பரந்து கிடக்கும் இலங்கையின் நிலப்பரப்பு தாமிரபர்ணி எனப்பட்டது.

தாமிரபர்ணி


எனினும் இலங்கைத் தீவின் புகழ் மிக்க பெயராகத் தாமிரபர்ணி மேலைத்தேய/ கீழைத்தேய அறிஞர்கள் பலராலும் தமது ஆவணங்களில் குறிக்கப்பட்டு வந்துள்ளமை கவனிக்கத்தக்கது. இலங்கைத் தீவின் தென்பெரும் பகுதிக்குரிய தாமிரபர்ணி என்ற பெயர், இலங் கை முழு வத ற்கு முரிய பொதுப் பெ யராக பயின்று வந்தமைக்குரிய காரணிகள் தெளிவானவை. மிகச் சிறந்த கடலோடிகளாக விளங்கிய கிரேக்க, ரோம,அராபிய வணிகர்க ளின் வர்த்தகக் கலங்கள் இந்து சமுத்திரத்தில் பிரவேசித்தபோது காற்றினதும் நீரோட்டத்தினதும் மரக்கல உந்துனை கதம்பநதி (அருவியாறு) க்கும் கல்யாணி நதி (களனிகங்கை) கங்கைக்கும் இடைப்பட்ட தாமிபரர்ணியின் மேற்குக்கு கரையோரம் நோக்கியதாக இருந்துள்ளது. எனவே மேலைத்தேயத்தவர்கள் அறிந்த பிரதேசமாக தாமிரபர்ணி விளங்கியமையால் இத்தீவின் பொதுப்பெயராக அதனைத் தமது தேசப்படங்களிலும் நூல்களிலும் குறித்துப் போயினர்.

கி.மு. 2 ஆம் நுாற்றாண்டில் வாழ்ந்த எரோதினீஸ், குளோடியஸ் தொலமி ஆகிய இரு வானவியல் புவியியல் அறிஞர்கள் அக்காலகட்டத்தில் வரைந்த தேசப்படங்களில் இலங்கைத் தீவை 'தப்ரோன்' எனக் குறித்துள்ளார். அவரது தேசப்படத்தைப் பின்பற்றி வரைந்த தொலமியும் இலங்கைத் தீவுக்கு 'தம்பரேன்' என்ற பண்டைய பெயரையே குறித்துள்ளார்.

தாமிரபர்ணி என்ற பெயர் கிரேக்க அறிஞர்களால் 'தப்ரோபேன்' எனவும் 'தப்ரபேன்' எனவும் உச்சரிக்கப்பட்டுள்ளது.''

இலங்கையின் வரலாற்றுப் பனுவலாகக் கொள்ளப்படும் மகாவம்சத்தில் தாமிரபர்ணிப் பிரதேசம் , 'தம்பபன்ன' எனக் குறிக்கப்படுகின்றது. தாமிரவர்ணி என்ற சமஸ்கிருத வார்த்தையின் பாளிமொழி உச்சரிப்பே தம்பபன்ன எனக் கொள்ளலாம். தாமிரபர்ணி என்று இலங்கைத் தீவு முழுவதும் அல்லது தென்பகுதி மட்டும் அழைக்கப்பட்டமைக்குரிய காரண ங்கள் பலவாகவுள்ளன. இலங்கையில் தென்கிழக்கே பாய்கின்ற தம்மன என்ற ஆற்றின் பெயரால் 'தம்பன்னி' என்ற பிரதேசப் பெயர் உருவாகியது என எச். பாக்கர் கருதுகிறார்.

விஜயனும் தோழரும் இளைப்பாறும் பொருட்டு உள்ளங்கைகளை நிலத்தில் வைத்துக் கொண்டு உட்கார்ந் தபோது உள்ளங்கைகள் செம்பு நிறமாக (தாமிர மாக) மாறியதால் அப்பகுதிக்குத் 'தம்பன்னி' என்ற பெயர் உண்டானதாக ஐதிகக் கதையுள்ளது.




இலங்கைத் தீவின் தென்பெரும் பகுதி தாமிரபர்ணி என்று அழைக்கப்பட்டமைக்கான ஏற்றுக் கொள்ளத்தக்க காரணமாக இ ந்தியத் தமிழ்நாட்டு மாநிலத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் பாய்கின்ற தாமிரபர்ணி நதி வடிநிலப் பிரதேசத்தோடமைந்த தொடர்பின் விளைவைக் குறிப் பிடலாம். மேற்குக் கரையோர மலைத்தொடரில் உற்பத்தியாகின்ற தாமிரபர்ணி ஆறு, திருநெல்வேலி மாவட்டத்தின் புகழ் பெற்ற பண்டைய குடியிருப்புப் பகுதியான ஆதிச்ச நல்லூரார் ஊடாகப் பாய்ந்து , மன்னார்க்குடாவில் இந்து சமுத்திரத்துடன் சங்கமமாகின்றது. இந்த ஆற்றுக்கு நேர்கிழக்கே இலங்கைத் தீவில் கொணா நதி (காலாஓயா) அமைந்துள்ளது. கதம்பநதிக்கும் (அருவியாறு) ,கொணாநதிக்கும் இடைப்பட்ட பிரதேசமே ''தாமிரபர்ணி' என அறிஞர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆகவே திருநெல்வேலி தாமிரபர்ணி ஆற்று வடிநிலமக்கள் பல்வேறு காரணங்களுக்காக இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் குடியேறி வாழ்ந்துள்ளனர். அவர்கள் தமது தாயகப் பெயரைத் தாம் குடியேறிய பகுதிக்குமிட்டனர் எனக் கொள்வது மிகவும் ஏற்ற காரணமாகும்.

சிங்கள வரலாற்றாசிரியரும் தொல்லியலாய்வாளருமான பரணவிதானவின் ஆய்வுக்கூற்று இதனை உறுதி செய்யும். அவர் 'விஜயனின் வருகைக்கு முன்னரே முத்துக்குளிக்க வந்த தாமிரபர்ணி மக்கள் கதம்பநதிக்கரையை அண்டிய பகுதிக்குத் தாமிரபர்ணி எனப் பெயரிட்டிருக்கலாம்' எனக் கூறிப் போந்தார். மன்னார்க் குடா முத்துக்குளித்தலுக்குப் புகழ் பெற்ற முத்துச்சலாபமாகும்.

தாமிரபரணி ஆற்றின் தென்கரையோர ஆதிச்ச நல்லூரில் கிடைத்த ஈமத்தாழிகளை ஒத்தவையே,இலங்கையின் தாமிரபர்ணிப் பிரதேசத்தில் பொம்பரிப்பு எனுமிடத்தில் கிடைத்த ஈமத்தாழிகளாகும் எனத் தொல்லியலாய்வுகள் இன்று நிரூபித்துள்ளன.

பொம்பரிப்பிற் கிடைத்த சிறப்பு மிக்க தொல்லியற்றடயங்கள் பாண்டி நாட்டுத் தாமிரபர்ணி மக்களும் இலங்கைத் தம்பபன்ன மக்களுக் குமிடையே இருந்த கலாச்சார ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டும் வரலாற்றேடுகள் எனின் மிகையாகாது. அத்துடன் இலங்கை வரலாற்று நூல்களில் மட்டுமன்றி இந்தியா, கிரேக்கம் முதலான நாட்டு இலக்கியங்களில் இருந்தும் கிடைக்கப் பெற்ற ஆதாரபூர்வமான குறிப்புக் களிலிருந்து கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே தாமிரப ர்ணி என்ற நிலப்பரப்பின் பெயரால் இலங்கை பிறநாடு களில் அறிமுக மாகியிருந்தது என்பது தெளிவாகின்றது.

நாகதீபம்

இலங்கைத் தீவின் தென்பெரும் பகுதி தாமிரபர்ணி என்றழை க்கப்பட்ட வேளையில் வடபகுதி நாகதீபம் அல்லது நாகதீவு என வழங்கப்பட்டுள்ளது. இலங் கையின் பூர்வகுடிகளான நாகர்கள் வாழ்ந்த பிரதேசம் , பண்டைநாளில் நாகதீபம் எனப்பட்டது. இப்பெயர் குறிக்கும் ஆள்புலப்பரப்பு சுருங்கியும் விரிந்தும் ஆய்வா ளர்களின் கண்டுணர்வுகளில் கூறப்பட்டுள்ளது. நாகதீபம் என்ற பெயர் சுட்டும் ஆள்புலம் நயினாதீவு எனச் சிலவிடத்தும் அவ்வாறன்று யாழ்ப்பாணக் குடாநாடு எனச் சிலவிடத்தும் கருதப்பட்டுள்ளது.

எனினும் இலங்கைத் தீவின் வடபெரும் ஆள்புலத்தின் பண்டைய பெயர் நாகதீபம் எனக் கொள்வதே ஏற்புடையதாக வுள்ளது.

வரலாற்றுக் கால த்தில் நாகதீபம் என்ற பிரதேசம் இலங்கையின் இன்றைய வடமா காணத்தைக் குறித்ததாக டபிள்யு. கெய்கர் குறித்துள்ளார். மகாவில்லாச்சியா (மதவாச்சி) க்கு வடக்கேயுள்ள பகுதியையே நாகதீபம் குறித்ததாக செலிக்மன் என்பார் கூற்று. இலங்கையின் வடபகுதியே வரலாற்றுக் கால நாகதீபம் என்பது பாக்கர் என்பவரின் முடிவு.

மகாவம்சத்தில் நாகதீவு பற்றிய குறிப்புக்கள் பலவுள்ளன. இரு நாக மன்னர்களுக்கிடையிலான தகரா றைத் தீர்த்து வைப்பதற்காகப் புத்தர் நாகதீவி ற்கு இரண்டாவது முறையா வருகை தந்தார் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. வசபன் என்ற மன்னன் (கி.பி. - 127 - 171) அனுராதபுரத்தை ஆண்ட காலத்தில் இசிகிரியன் என்பவன் நாகதீபத்தை ஆண்டதாக வல்லி புரத்தில் கிடைத்த பொற்சாசனம் குறிப்பதிலிருந்து இலங்கையின் வடபகுதி நாகதீபம் என வழங்கப் பட்டமை நிரூபண மாகின்றது.

(தொடரும்)

படிப்பகம்